Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 06, 2023

புதன்கிழமை செப்டெம்பர் 06, 2023 | ஒளி: 09 கதிர் 078 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை

அரிசி கையிருப்பு தேவை என்பதால் நாம் தேசிய ரீதியில் அதனை கொள்வனவு செய்யும் போது மேலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட இடமுண்டு என்றும் அதனால் அரிசியை இறக்குமதி செய்து கையிருப்பை முன்னெடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### அமைச்சராக இருந்தபோது

## சட்டவிரோத ஆட்சேர்ப்பு மேற்கொண்டார் சஜித்

வீடமைப்பு அமைச்சராக சஜித் பிரேமதாச இருந்த காலப்பகுதியில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை சேர்ந்த சுமார் 2,100 பேர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் சட்டவிரோதமாக ஊழியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து இலங்கையில் விசாரணை நடத்தி

# பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க முடியாது



## சர்வதேச விசாரணை அவசியம் என்கிறார் சஜித்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை இந்த நாட்டில் விசாரணை நடத்தி கண்டுபிடிக்க முடியாது என்றும் அதனால் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) விசேட கூற்றொன்றை முன்வைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட நிலையில் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் நானும் போட்டியிட்டேன். அப்போது கோட்டாபய ராஜபக்ஷவுக்கே வாக்களிக்குமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார். அவர் எனக்கு எதிராக வாக்களிக்குமாறு தெரிவித்தமையை நான் பொருட்படுத்தவில்லை.

நாட்டில் அப்போது தேசிய பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை இருந்தது. குண்டுத் தாக்குதல்கள் காரணமாக பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மட்டுமன்றி கத்தோலிக்க மக்கள் மிகவும் மனவேதனையில் இருந்தனர். இந்நிலையில் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையால் நாங்கள் தோல்வியுற்றோம்.

தொடர்ச்சி P2

### 2022 க.பொ.த உயர்தரத்தில்

## 63.3 சதவீதமானோருக்கு பல்கலைக்கழக அனுமதி

2022 க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, இம்முறை 63.3 சதவீதமானோர் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

திங்கட்கிழமை (04) வெளியிடப்பட்ட பெறுபேறுகளுக்கு அமைய 166,938 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்பதுடன், 84 மாணவர்களின் பெறுபேறுகளை அதிகாரிகள் நிறுத்தி வைத்துள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### அவசர திட்டங்களுக்கு

## 3.9 மில். அமெ. டொலர் வழங்க இணக்கம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அடையாளம் காணப்பட்ட வீதித் திட்டங்களை நிறைவு செய்வதற்காக 3.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு வங்கி இணங்கியுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### சீரற்ற வானிலையால்

## 9 மாவட்டங்களில் 6,049 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் 9 மாவட்டங்களில் 1,630 குடும்பங்களைச் சேர்ந்த 6,049 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

கடந்த இரண்டு நாட்களில் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய நிலைமை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





## வடக்கு ரயில் மார்க்கத்தை மீண்டும் மூட நடவடிக்கை

### 10 ஆயிரம் தண்டவாளங்கள் இறக்குமதி

நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்காக எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 6 மாதங்களுக்கு வடக்கு ரயில் மார்க்கத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதற்கமைய, கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை மணித்தியாலத்துக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில்களை இயக்க முடியும் என்றார்.

தொடர்ச்சி P2

## வலி. வடக்கு மக்களின் முகாம் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி



வலிகாமம் வடக்கு அன்ரனிபுரத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட அரச காணிகள் பொது மக்களுக்கு செவ்வாய்க்கிழமை (05) பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நீண்ட காலமாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற வலி. வடக்கை பூர்வீகமாக கொண்ட சுமார் 49 குடும்பங்களுக்கு தலா ஒன்றரை பரப்பு வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## எகிப்து பிரதமருடன் ருவன் சந்திப்பு



கென்யாவின் நைரோப் நகரத்தில் நடைபெற்றுவரும் ஆபிரிக்க காலநிலை தொடர்பான மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருக்கும் ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, எகிப்து பிரதமர் முஸ்தபா மெட்பௌலியை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய ருவன் விஜேவர்தன குறித்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார்.

எகிப்து பிரதமர் மற்றும் ருவன் விஜேவர்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக்கொள்ளும் இயலுமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அதேபோல் காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பிலும் எகிப்து ஜனாதிபதியை ருவன் விஜேவர்தன தெளிவுபடுத்தினார்.

அதேபோல் இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்துவது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

கென்யாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கனா கனநாதனும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டார்.

### கோட்டாபய ராஜபக்ஷவின்

## தேர்தல் பிரசாரத்துக்கு இவர்களும் உடந்தை



கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் அப்போது மக்களைத் தூண்டினார் என்றும் இவ்வாறானவர்களையும் கோட்டாவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக செயற்பட்டவர்களாக கருத வேண்டும் என்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பதினேழு ஆண்டுகள் கடந்தும் மகனை பார்க்க முடியவில்லை

## தான் இறக்க முன் தனயனை காண தந்தை ஆதங்கம்

நிதர்ஷன் வினோத்

“இலங்கை இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட எனது மகன் சிறைச்சாலைக்குள் இருப்பதற்கான ஆதாரங்கள் ஊடகங்கள் மூலம் இரண்டு தடவைகள் வெளிவந்தபோதும் பதினேழு ஆண்டுகள் கடந்தும் இதுவரையும் எனது மகனை பார்க்க முடியவில்லை” என்று தந்தையான சுந்தரலிங்கம் அருணகிரிநாதர் தெரிவித்தார்.

இதுகுறித்து கவலை வெளியிட்ட அவர், தான் இறப்பதற்கு முன் தன் மகனை பார்க்க உரிய தரப்புக்கள் உதவ வேண்டும் என்றும் கண்ணீர் மல்க கோரிக்கையை முன்வைத்தார்.

தொடர்ச்சி P2



## ஆசிரியரின் விடுதிக்குள் ஆழக்குழி பறித்து அகழ்வு

செ.தி பெருமாள், எஸ். சதீஸ்

மஸ்கெலியா மௌசாகலை நீர்தேக்கத்துக்கு அருகாமையில் உள்ள ஆசிரியர் ஒருவரின் விடுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



### பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை

## வர்த்தமானியில் வெளியிட்டு சபையில் சமர்ப்பிக்க அனுமதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்து பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முன்வைப்பதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் 2023ஆம் ஆண்டு

தொடர்ச்சி P2

### கரிநாள் பேரணியால் அமைதிக்கு பங்கம்

## செல்வம், சார்ள்ஸ், சிவாஜிக்கு யாழ். நீதிமன்று பிடியாணை

எம்.றொசாந்த்

பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றினால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கரிநாள் பேரணியில் கலந்து கொண்டு , அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதன் , சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் எம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சட்டவிரோத ஆட்சேர்ப்பு மேற்கொண்டார் சஜித்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட எம்.பி.யான சஹன் பிரதீப் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர்,"சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்த 2015-2019 காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை சேர்ந்த சுமார் 2,100 பேர் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். இது சட்டவிரோதமானது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட காரியாலயங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவர்களுக்கு வேலை செய்வதற்கு மேசை அல்லது நாற்காலி இருக்கவில்லை.

இந்த ஊழியர்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட போதும் அவர்கள் அப்போது வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாசவின் அலுவலகங்களிலேயே பணியாற்றினர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகவே இந்த ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ந்து ஆட்சேர்ப்புக்காக அதிகார சபை வருடாந்தம் 1537 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டியுள்ளது"என்றார்.

## 3.9 மில். அமெ. டொலர் வழங்க இணக்கம்

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

எஞ்சியுள்ள வீதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 53 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்குறிப்பிட்ட தொகையை வழங்க இணங்கியுள்ளது.

எவ்வாறாயினும், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறை நிலுவையில் உள்ள காரணத்தால் இந்த உதவி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

தன்னால் முடிக்கப்பட வேண்டிய அவசரத் திட்டங்களைக் கண்டறிந்து, இந்த ஆண்டுக்குள் 3.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுவிக்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பதினேழு ஆண்டுகள் கடந்தும் மகனை பார்க்க முடியவில்லை

கல்வியங்காட்டில் உள்ள இல்லத்தில் ஊடகங்களுக்கு செவ்வாய்க்கிழமை (05) கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2006ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 25ஆம் திகதி நல்லூர் அரசடி இராணுவ சோதனைச் சாவடியில் இராணுவத்தினால் எனது மகன் அருணகிரிநாதன் சுதன் பிடித்து செல்லப்பட்டார்.

அதன் பின்னர் சில காலம் எனது மகனை இராணுத்தினர் வைத்திருந்ததை எமது உறவினர்கள் நண்பர்கள் பலரும் கண்டு எனக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

குறித்த விடயத்தை பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியபோதும் அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து பேசியபோது 48 பேர் கொண்ட கைதிப்பட்டியலில் தனது மகனும் இருப்பதை உறுதிப்படுத்திய நிலையில் மகனின் விடுதலையை கோரியபோதும் அது சாத்தியப்படவில்லை.

"நாங்கள் நிரபராதிகள் விடுதலைக்கு உதவுங்கள் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் அமைச்சர்களிடம் வேண்டுகோள்" எனும் தலைப்பில் 2007 செப்டம்பர் 8ஆம் திகதி வெளியான பத்திரிகை செய்தியில் உள்ள புகைப்படத்தில் எனது மகனும் சிறைக்குள் இருப்பது தெரிய வந்தது.

அப்போது இருந்த அமைச்சர் ராஜித சேனராத்ன பிரதி அமைச்சர்களான பி.ராதாகிருஸ்ணன், கே.ஏ.பாயிஸ் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், உள்ளிட்ட பலரும் பூசா முகாமில் கைதிகளை பார்வையிட்டனர் என்று செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க முடியாது



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை இவர்கள் பயன்படுத்திக்கொண்டு, முதலைக்கண்ணீர் வடித்தனர். தாக்குதலை தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்திக்கொண்டு வாக்கு பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க விசாரணை நடத்துமாறு வெளிநாட்டு புலனாய்வு பிரிவு எமக்கு தெரிவிப்பது தொடர்பில் நாங்கள் வெட்கப்பட வேண்டும்.

வெளிநாட்டு ஊடகமொன்று விசாரணை நடத்துமாறு தெரிவிக்கும் வரை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? இதற்கு வெளிநாடுகளின் ஆலோசனை தேவையா? ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை இந்த நாட்டில் விசாரணை நடத்தி கண்டுபிடிக்க முடியாது. அதனால் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்றார்.

## 9 மாவட்டங்களில் 6,049 பேர் பாதிப்பு

இதன்படி, காலி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி, கேகாலை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் 1,199 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பு மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மோசமான வானிலை காரணமாக நாடு முழுவதும் 122 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

## வடக்கு ரயில் மார்க்கத்தை மீண்டும் மூட நடவடிக்கை

இதனிடையே, கொழும்பு முதல் பாணந்துறை வரையிலான ரயில் மார்க்கத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் சில நாட்களுக்குள் ஆரம்பிக்கப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

களனி மிட்டியாவத்தை ரயில் பாதையின் வேகக் கட்டுப்பாட்டை நீக்கி, வேகத்தை அதிகரிப்பதற்கான புனரமைப்பு பணிகளையும் இம்மாத முற்பகுதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவில் இருந்து 200 கோடி ரூபாய் பெறுமதியான 10 ஆயிரம் தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், கடலோர ரயில் பாதை உட்பட விரைவில் சீரமைக்க வேண்டிய மர்கங்களை சீரமைக்க அவை பயன்படுத்தப்படும் என்றும் இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த தண்டவாளங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவி மூலம் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், தற்போது ரயில்வே திணைக்களத்துக்கு தண்டவாளங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வலி. வடக்கு மக்களின் முகாம் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி

குறித்த பிரதேசம் உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருந்து வந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கடந்த பெப்ரவரி மாதமளவில் விடுவிக்கப்பட்டிருத்தது.

விடுவிக்கப்பட்ட அரச காணிகளை முகாம்களில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குலுக்கல் முறையில் காணிகளை தெரிவு செய்து பயனாளர்களுக்கு வழங்கி வைத்த நிகழ்வில் வலி வடக்கு பிரதேச செயலாளர் திரு.சிவஸ்ரீ, யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர் செல்வி. சாந்தாதேவி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு சிவகுரு பாலகிருஷ்ணன்(தோழர் ஜீவன்) மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வர்த்தமானியில் வெளியிட்டு சபையில் சமர்ப்பிக்க அனுமதி

மார்ச் 22 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில பிரிவுகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற பல தரப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களைக் கருத்தில் கொண்டு அச்சட்டமூலத்துக்கு தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக இது தொடர்பில் ஆர்வமுள்ளவர்களிடம் முறையான கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் கோரியதுடன், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் சில தரப்பினருடன் கலந்துரையாடினார்.

அதேசமயம், சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு, அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அசல் சட்டமூலத்தை திருத்தியமைத்து, சட்டவரைஞரால் புதிய சட்டமூலத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த புதிய சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஆசிரியரின் விடுதிக்குள் ஆழக்குழி பறித்து அகழ்வு

மஸ்கெலியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய திங்கட்கிழமை (04) இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை மீட்டுள்ள பொலிஸார், மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட விடுதி ஆசிரியர் ஒருவரின் விடுதி எனவும் அங்கு 35 அடி ஆழமான குழி தோண்டப்பட்டுள்ளதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக கூறினர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலை படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த மஸ்கெலியா பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## செல்வம், சார்ள்ஸ், சிவாஜிக்கு யாழ். நீதிமன்று பிடியாணை

பி சிவாஜிலிங்கம் மற்றும் யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸாரினால் யாழ்.நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் திங்கட்கிழமை (04) வழக்கு நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது , மன்றில் சமூகமளிக்காத மேற்குறிப்பிட்ட மூவருக்கும் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

## அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி.யான தயாசிறி ஜயசேகர எம்பி எழுப்பிய கேள்விக்கு பதிலித்த அமைவ்வர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த வருடத்தில் நாம் முன்னெடுத்த உரம் தொடர்பான கொள்கை காரணமாக நாட்டின் விவசாயத்துறை பெரும் வீழ்ச்சி கண்டமையால், கடந்த வருடத்துக்காக ஏழரை இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டது.

எனினும் கடந்த பெரும்போகம் எமக்கு சாத்தியமானதாக அமைந்ததால் இந்த வருடத்தின் இதுவரை காலத்தில் வெளிநாட்டிலிருந்து அரிசி கொள்வனவை மேற்கொள்ளவில்லை.எ வ்வாறெனினும் இம்முறை வறட்சி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சிறு போகத்தில் நாம் எதிர்பார்த்த நெல்லைபெற முடியாமல் போகும்.

கடந்த ஓரிரு வாரங்களில் 40 முதல் 45 ரூபாயால் அரிசி விலை அதிகரித்துள்ளது. எனினும் அதற்கு சமமானதாக விவசாயிகளுக்கு நெல்லின் விலை அதிகரிக்கப்பட்டதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

வழமை போன்று குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்து அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் நிலையே தற்போது காணப்படுகிறது.

எமக்கு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை உள்ளது. அந்த விலையை மீறி விற்பனை செய்தால் அதனை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். எமக்கு அரிசி கையிருப்பு தேவை என்பதால் நாம் தேசிய ரீதியில் அதனை கொள்வனவு செய்யும் போது மேலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட இடமுண்டு. அதனால் அரிசியை இறக்குமதி செய்து கையிருப்பை முன்னெடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விலை அதிகரிப்பு மேற்கொள்வோர் தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை சுற்றி வளைப்பை மேற்கொண்டு வருகிறது.

பாரிய நெல் ஆலை உரிமையாளர்களிடம் அரிசி உள்ள போதும் அவர்கள் அதனை விற்பனைக்கு விடவில்லை. அவர்கள் அதிக விலைக்கே அரிசியை விற்பனை செய்கின்றனர். அது தொடர்பில் நாம் இந்த வாரத்திற்குள் உரிய நடவடிக்கை எடுப்போம்" என்றார்.

## 63.3 சதவீதமானோருக்கு பல்கலைக்கழக அனுமதி

உயிரியல் விஞ்ஞான பிரிவில் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தின் ப்ரமுதி பாஷனீ முதலிடத்தையும் கொழும்பு றோயல் கல்லூரியின் மனெத் பனுல பெரேரா இம்முறை கணித பிரிவில் நாடளாவிய ரீதியில் முதலிடத்தையும் பெற்றுள்ளனர்.

வணிகப் பிரிவில், கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க பாலிகா வித்தியாலயத்தின் தில்சரணி தருஷிகா நாடளாவிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளதுடன், கேகாலை புனித ஜோசப் பாலிகா வித்தியாலய மாணவியான சச்சினி சத்சரணி, கலைப்பிரிவில் நாடளாவிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

காலி ரிச்மண்ட் வித்தியாலயத்தைச் சேர்ந்த சமுதித்த நயனப்ரிய, பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் முதலிடம் பெற்றுள்ளதாகவும் பொறியியல் பாடப்பிரிவில் கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ருச்சினி அஹிங்சா நாடளாவிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தேர்தல் பிரசாரத்துக்கு இவர்களும் உடந்தை

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ஹெக்டர் அப்புஹாமியின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

"ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி மற்றும் அதன் உள்ளடக்கம் பாரதூரமானது. நாட்டு மக்களை கொன்று இரத்தத்தின் ஊடாக ஒரு தரப்பினர் ஆட்சியை கைப்பற்றியிருந்தால் அந்த சதி தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த விடயம் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?" என்று அப்புஹாமி எம்.பி கேள்வியெழுப்பினார்.

அதற்கு பதிலித்த அமைச்சர் மனுஷ, "2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி குறித்து ஜனாதிபதி தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த காணொளி விடயம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி தேவைப்பட்டால் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது.அதேவேளை ஜெனிவா கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் தான் இவ்வாறான காணொளிகள் வெளியாவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2019 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அப்படியானால் அதிகாலையிலேயே சென்று கோட்டாவுக்கு வாக்களியுங்கள் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அப்போது மக்களைத் தூண்டியிருந்தார்.

இன்னொருபுறம் ஒருதரப்பினர் அழுது கொண்டு ஒரு தரப்புக்கு சார்பாக மட்டும் செயற்பட்டார்கள். ஆகவே இவர்கள் அனைவரும் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக செயற்பட்டவர்களாகவே கருதப்பட வேண்டும் என்றார்.

# பொத்துவில் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள பொத்துவில் ஆதார வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வந்து சகல வசதிகளுடனும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸாரப் செவ்வாய்க்கிழமை (05) தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கமைய வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து அபிவிருத்தி செய்வது தொடர்பான திட்ட வரைபை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் ஜனாதிபதி கோரியுள்ளதாக தெரிவித்தார்.

மாகாண சபையின் கீழ் உள்ள ஆதார வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து சகல வசதிகளுடனும் அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும், நீண்ட காலமாக இவ் வைத்தியசாலையில் நிலவும் சிற்றூழியர், விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட பௌதீக வளப் பற்றாக் குறைகள் நீண்ட காலமாக நிலவுவதாகவும், இதனால் பொது மக்கள் பல்வேறு அசௌகரீகங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்தார்.

நோயாளிகளை அவசர சிகிச்சைக்காக சுமார் 40, 70 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, அம்பாறை ஆதார வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லக் கூடிய துர்ப்பாக்கிய நிலைக்கு பொத்துவில் பிரதேச மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்றார்.

# தொழிலாளர்களுக்கு "SLIC ஜீவன சக்தி" அறிமுகம்

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் என்பன இணைந்து பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான முன்னோடி காப்புறுதி திட்டமான "SLIC ஜீவன சக்தி" அறிமுகபடுத்தி வைக்கப்பட்டது.

இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இதற்கான நிகழ்வு ஹில்டன் கிரேன்டில் செவ்வாய்க்கிழமை (05) நடைபெற்றது.

"SLIC ஜீவன சக்தி" என்பது பெருந்தோட்ட தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு முக்கியத்துவம் - முன்னுரிமை வழங்கும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஆயுள் மற்றும் சுகாதார காப்புறுதி திட்டமாகும்.

பெருந்தோட்டதுறையில் தொழில்நேரத்தில் இடம்பெறும் விபத்துகள் மற்றும் மரணங்களை கருத்திற்கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்கருதி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமையவே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.




இதன்மூலம் பெருந்தோட்ட தொழிலாளருக்கும், அவரின் துணை மற்றும் இரு பிள்ளைகளுக்கு இத்திட்டம் செல்லுபடியாகும்.

காப்புறுதி காலத்தில் இறப்பு ஏற்பட்டால் 3 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும். 23 வகையான நோய்களுக்கு காப்புறுதி வழங்கப்படுகின்றது. குளவிக்கொட்டு உள்ளிட்ட விடயங்களால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் - அங்கு தங்கி இருந்து சிகிச்சைபெற்றால் நாளொன்றுக்கு 500 ரூபாய் வீதம் வழங்கப்படும். இதர கொடுப்பனவும் வழங்கப்படும்.

இந்த காப்புறுதி திட்டத்துக்காக தொழிலாளர் ஒருவர் மாதம் 99 ரூபாய் செலுத்த வேண்டும். ஆறு மாதம் அல்லது ஒரு வருடகாலப்பகுதியில் நிதி அறவிடப்படும்.

தொழிலாளர்களை பாதுகாக்கவும், தொழிலாளர்கள் ஏனையோரை தங்கியிருக்கும் நிலையை நிவர்த்தி செய்வது திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமல்ல தோட்டத்தில் உள்ளவர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளும் இந்த காப்புறுதி திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம். 99 ரூபாதான் ஆரம்பம், பொருளாதார தேவைக்கேற்ப காப்புறுதி திட்டத்தை மாற்றிக்கொள்ளலாம்.

தோட்டத் தொழிலாளர் ஒருவர் தமக்கான பாதுகாப்புக்கு நாளொன்றுக்கு 3 ரூபாவையே ஒதுக்க வேண்டும், எனவே, இத்திட்டம் வெற்றிகரமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மகளை பந்தாடிய தாயும், தவறான கணவனும் கைது



தனது, நான்கு வயது மகளை தாக்கி பலத்த காயங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் சிறுமியின் தாயும், தாயின் சட்ட விரோதமான கணவனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என குருநாகல் தொரட்டியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான தம்பதியினர் குருநாகல் அலகொல்தெனிய மோடர்வத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

சிறுமியின் முகம், முதுகு மற்றும் கைகால்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன் தாக்குதலால் அவரது கண் பகுதி சேதமடைந்தது.

வீட்டுக்குள் வைத்து சிறுமியின் மீது பல நாட்களாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டனர். குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான தாயாருக்கும் தவறான கணவனுக்கு எட்டு மாதக் குழந்தையொன்று இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஸ்ரீராதா கிருஷ்ண ஆலய கிருஷ்ண ஜயந்தி

■ கிருஷ்ணப்பிரியன்

கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீராதா கிருஷ்ண ஆலய கிருஷ்ண ஜயந்தியும், ஜன்மாஷ்டமி விழாவும், செப்டம்பர் 6ஆம் 7ஆம் திகதிகளில் பக்திபூர்வமாக கொண்டாடப்படும்.

புதுச்செட்டித்தெரு தெரு ஸ்ரீராம் மண்டபத்தில் உலகப் புகழ் நடனக் கலைஞர்களான இந்தியாவைச்சேர்ந்த ஹரி, சேத்தனா ஆகியோர் வழங்கும் கதக் நடனம் 7ஆம் திகதி மாலை 7 மணிக்கு இடம்பெறும்.

6ஆம் திகதி புதன்கிழமை காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் துளசி, தர்சன, குருபூஜை ராஜபோக, தூப ஆராத்திகள் என்பன இடம்பெறும்.

மாலை 6.30 மணிக்கு சந்தியா ஆரத்தியைத்தொடர்ந்து ஹரே கிருஷ்ணா இசை நாட்டியக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

7ஆம் திகதி வியாழனன்று



காலை மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் விழாவில் நகர சங்கீர்த்தனமும், குழந்தை கிருஷ்ணர் ஊர்வலமும் நடைபெற்று குழந்தை கிருஷ்ணருக்கு பாலாபிஷேகமும், தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.

இரவு 11.00முதல் நள்ளிரவு 12.00 மணிவரை ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், விஷேட ஆராதனைகளும் இடம்பெற்று அருட்பிரசாதம் வழங்கப்படும்.

அபிஷேகத்துக்குவேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள், மற்றும் அன்னதானத்திற்குவேண்டிய சகல பொருட்களையும் பக்தர்கள் வழங்கலாம்.

# கன்றுகளை ஈன்றதும் திடீரென இறந்துவிடும் பசுமாடுகள்


■ எஸ் சதீஸ்

பொகவந்தலாவ, கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்டப்பகுதியில் கடந்த மாதத்தில் மாத்திரம் கன்றுகளை ஈன்ற ஐந்துக்கும் மேற்பட்ட பசுமாடுகள் உயிரிழந்துள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர் கன்றுகளை ஈன்றெடுத்த ஐந்து பசுமாடுகளும் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களுக்கு பின்னர் உயிரிழந்துள்ளன.

பொகவந்தலாவ பிரதேசத்தில் உள்ள மிருக வைத்தியசாலையில் சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாக வைத்தியர் ஒருவர் இல்லையென தெரிவிக்கும் கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளுக்கு சுகயீனம் ஏற்பட்ட பிறகு ஹட்டன் பகுதியில் உள்ள மிருக வைத்தியசாலையின் வைத்தியருக்கு அறிவிக்க வேண்டியுள்ளது.

அவ்வாறு அறிவித்தாலும் பொகவந்தலாவ பகுதிக்கு வருவதற்கு நான்கு மணித்தியாலங்கள் எடுப்பதாகவும் அங்கிருந்த வைத்தியர் வருவதற்கு முன்னமே கால்நடை இறந்து விடுவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு பொகவந்தலாவ மிருக வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரையும் நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.




# மீற்றர் வட்டி எகிறியதால் தன்னுயிரை மாய்த்த பெண்

■ எஸ் தில்லைநாதன்

மீற்றர் வட்டிக்கு பணம் பெற்று கடனில் சிக்கிய ஓட்டுமடம் - யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ஜெயராசா அருள்பாலினி (வயது 34) தவறான முடிவெடுத்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இச்சம்பவமானது திங்கட்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த பெண் மீற்றர் வட்டிக்கு பணத்தினை பெற்றுள்ளார். இந்நிலையில் மீற்றர் வட்டி அதிகரித்தமையால், வட்டிக்கு பணம் கொடுத்த தரப்பினரால் வீடு, லொறி, வாகனம், மோட்டார் சைக்கிள் மற்றும்



முச்சக்கர வண்டி என்பன பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் மிகுதி வட்டிப்பணம் செலுத்தாதன் காரணமாக வட்டிக்கு பணத்தினை கொடுத்தவர்கள் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் தன்னால் இனி உயிர்வாழ முடியாது என்றும் உயிரை மாய்க்கப் போவதாகவும் கணவனிடம் கூறியுள்ளார். அதற்கு கணவன், பத்து மாதத்தில் கைக் குழந்தை உள்ளது எனவே இவ்வாறு தவறான முடிவு எடுக்க வேண்டாம் என கூறிவிட்டு கோவிலுக்கு சென்றுள்ளார்.

கோவிலில் இருந்து மதியம் வீடு திரும்பியவேளை வீடானது பூட்டப்பட்டிருந்தது. கதவினை திறந்து உள்ளே சென்று பார்த்தவேளை குறித்த பெண் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

# 12 சிலிண்டர்களை திருடியவர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரை வீதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விற்பனை முகவர் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்கள் சூட்சமமான முறையில் திருடிய சந்தேக நபரை காத்தான்குடி பொலிஸார் திங்கட்கிழமை (05) கைது செய்துள்ளனர்.

எரிவாயு முகவர் நிலையத்தின் பின்புறமாக மதிலின் மேலே ஏறி குறித்த சந்தேக நபர் 12 எரிவாயு சிலிண்டர்களை திருடியுள்ளார்.

திருடிய கொள்கலன்களை தனது வீட்டில் மறைத்து



வைத்திருந்த போது பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரிடம் இருந்த 9 சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன. மீதியான மூன்று சிலிண்டர்களையும் குறித்த சந்தேக நபர் விற்பனை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.


# அறிவித்தல்

**PMF FINANCE PLC (PQ-200)**

**39வது ஆண்டு பொதுக்கூட்டம்.**

PMF Finance PLC (நிறுவனம்) தமது 39வது ஆண்டு பொதுக்கூட்டத்தை 2023 செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 09.00 மணிக்கு இணையத்தளத்தின் மெய்நிகர் தளம் மூலம் நடைபெறுவதுடன் பங்குதாரர்கள் நிறுவனத்தின் கார்ப்பரேட் இணைய-தளமான https://pmf.lk/en/ மற்றும் கொழும்பு பங்குச் சந்தை இணையத்தளமான https://cse.lk/ pages/companyprofile/companyprofile.component.html?symbol=PMB.N0000. ஆகிய வெளியிடப்பட்ட விரிவான சுற்றறிக்கையின்படி நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொதுவான வணிக விஷயங்கள் குறித்து ஏற்பாடுகள் செய்யப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விரிவான வருடாந்திர அறிக்கை, கூட்டத்தை கூட்டுவது குறித்த விரிவான அறிவிப்பு மற்றும்

நிகழ்ச்சி நிரல்களின் ப்ராக்ஸி அனுமதி பத்திரம் மற்றும் பதிவு செய்வது பற்றிய தேவையான தகவல்களுக்கு கொழும்பு பங்குச் சந்தை இணையத்தளத்திற்கு https://cse.lk/pages/companyprofile/companyprofile.component.html?symbol=PMB.N0000 மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தளமான https://pmf.lk/en/ ஆகிய இணையதளத்தினை அணுகவும்.

வருடாந்திர அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலைக் கோரும் எந்தவொரு பங்குதாரருக்கும், அந்தக் கோரிக்கையைப் பெற்ற நாளிலிருந்து எட்டு (08) வேலை நாட்களுக்குள் அத்தகைய அச்சிடப்பட்ட நகல் வழங்கப்படும். இந்த கோரிக்கையை pmfagm@pmf.lk என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் (வேலை நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை) கீழ் காணப்படும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
டயனா வெலிகமகே - நிறைவேற்று செயலாளர் - PMF Finance PLC
தொ.பேசி இலக்கம்:- + 94 0117 666 333 (நீட்டிப்பு 352)
சாரா திஸாநாயக்க - நிறைவேற்று - சட்டம் - Corporate Services (Pvt) Ltd
தொ.பேசி இலக்கம்:- +94 0114 605182

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
CORPORATE SERVICES (PRIVATE) LIMITED
**செயலாளர்கள்**
PMF FINANCE PLC
**2023 ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி, கொழும்பு**

# கரத்தைத் துண்டித்தது கடந்து போகும் வெறும் செய்தியல்ல

உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் ஒருவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றால், அந்த நோயாளியின் உறவினர்கள், நண்பர்கள் என அனைவரும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோரும், அந்த வைத்தியர்களை தெய்வமாகவே வணங்குவர். கடுமையான முயற்சிகளுக்குப் பின்னர் நோயாளி மரணமடைந்துவிட்டால், கடுமையாக முயற்சித்தும் பலனளிக்கவில்லையென மனதைத் தேற்றிக்கொள்வர்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் தவறான ஊசியை ஏற்றியமை, தவறான மருந்தைக் கொடுத்தல், அதிகூடுதலான செறிவு அடங்கிய ஊசி மருந்தை ஏற்றியமை உள்ளிட்ட இன்னும் பல காரணங்களால், நிகழும் அசட்டையீன மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

தவிழைத்தவர்கள் எவரும் தண்டிக்கப்படவில்லை. எனினும், விசாரணைகள் எனும் போர்வையில் நீண்டநாள் இழுத்தடிப்புகளே இடம்பெறுகின்றன. அதற்கிடையில், அப்பாவி மனித உயிர்கள் பலியெடுக்கப்படுகின்றன. இல்லையேல் அவயவயங்கள் துண்டிக்கப்படுகின்றன. பார்வை இழப்பு, பார்வை கோளாறு ஆகியன இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

நுவரெலியா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்ட 34 பேரில் 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முழு பார்வையையும் இருவர் இழந்துவிட்டனர். அவர்களின் எதிர்காலம் இருளாக்கப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள், மருந்துகளின் மீது விரலை நீட்டிவிட்டு தப்பித்துக்கொள்வர்.

காய்ச்சல் காரணமாக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 8 வயதான சிறுமிக்கு ஏற்றபட்ட தவறான ஊசி மருந்தால், அச்சிறுமியின் இடது கையில் மணிக்கட்டுக்கு கீழ் துண்டிக்கப்பட்டமை அண்மைய செய்தியாகும். இது இறுதியானதாகவும் இருக்கமுடியாது. ஏனெனில், பல வருடங்களுக்கு இடையில் எப்போதாவது இடம்பெறும் இவ்வாறான தவறிழைப்புகள் நாளாந்த செய்திகளாகிவிட்டன.

காய்ச்சலை குணமாக்க அனுமதிக்கப்பட்ட சிறுமி, இடது கை துண்டிக்கப்பட்ட நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். அச்சிறுமியின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது,

அவயவங்கள் இன்றி பிறக்கும் எத்தனையோ குழந்தைகள், தங்களுடைய திறமையால் பல்வேறான துறைகளில் மிளிர்கின்றனர். இன்னும் பல சாதனைகளை படைத்துவருகின்றனர். அவர்களுக்கு அவையொன்றும் குறைப்பாடாகவே தெரிவதில்லை. எனினும், இடது கையின் மணிக்கட்டின் கீழ் துண்டிக்கப்பட்ட இந்த சிறுமிக்கு நடந்தவை, கவனயீத்தால் ஏற்பட்ட துர்பாக்கியமான சம்பவங்களில் ஒன்றாகும்.

கடவுளுக்கு ஒருபடி மேலே சென்று தெய்வமாக நினைக்கும், வைத்தியசாலைகளில் இன்னமும் வினைத்திறனாக இயங்க வேண்டிய இடத்தில் பொறுப்பானவர்கள் சிலரின் கவனயீனம் முழு வைத்திய துறையையும் கேள்விக்கு உட்படுத்திவிடுகின்றது.

யாழ்.சிறுமியின் இடது கை துண்டிப்பு வெறும் செய்தியல்ல என்பதை கவனத்தில் எடுத்து, வைத்தியதுறையில் காணப்படும் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, உயிர்களுக்கு உத்தரவாதமளிக்க வேண்டிய பொறுப்பு, வைத்திய துறையைச் சேர்ந்தவர்களின் பாரிய பொறுப்பாகும் என்பதை நினைவில் கொள்க.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அனுரவுக்கு ஏன் இந்த அவசரம்?



எம்.எஸ்.எம். ஐயூப்

சட்டப்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சுமார் ஒரு வருடம் இருக்கும் நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்துள்ளது.

கடந்த வாரம் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் தலைவரான அனுர குமார திஸாநாயக்க தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுச் சபை தம்மை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் நீண்ட காலமாக சஜித் பிரேமதாசவே தமது ஜனாதிபதி வேட்பாளரென கூறி வருகிறது. ஆயினும் தேசிய மக்கள் சக்தி உத்தியோகபூர்வமாக நிறைவேற்றுச் சபையால் முடிவு செய்து தமது வேட்பாளரை அறிவித்துள்ளது.

மக்கள் இனம், மதம், சாதி என்று பார்த்து தேர்தல்களின் போது வாக்களிக்கும் இலங்கையில், சிறுபான்மையினத்தவர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் சாத்தியமே இல்லை. எனவே பொதுவாக சிறுபான்மையினத்தவர் ஒருவரும் இத்தேர்தலில் போட்டியிடுவதில் அக்கறை காட்டுவதில்லை. இதற்கு முன்னர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் குமார் பொன்னம்பலம் மற்றும் முன்னாள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரான ஐ.எம். இல்யாஸ் போன்ற ஓரிருவர் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டுள்ளனர். ஆயினும் அவர்கள் வெற்றி பெறுவதற்காகவன்றி வேறு நோக்கங்களுக்காகவே அவ்வாறு போட்டியிட்டனர்.

ஆயினும் இனப் பிரச்சினை உள்ளிட்ட நாட்டின் சகல பிரச்சினைகளிலும் ஜனாதிபதியே முக்கிய பங்காற்றுகிறார். நாடு முன்னேறுவதிலோ அல்லது அழிவை நோக்கிச் செல்வதிலோ அவரது முடிவுகள் மிகவும் முக்கியமாகும். எனவே சிறுபான்மை மக்கள் இந்தத் தேர்தல்களை உதாசீனம் செய்ய முடியாது. அதேவேளை தேசிய மக்கள் சக்தியானது அண்மைக் காலத்தில் தென் பகுதியில் வெகுவாக பிரபல்யம் அடைந்துள்ளது. கடந்த பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அறிவிக்கப்பட்ட கருத்துக் கணிப்புக்களின் படி அக்கட்சியே முன்னணியில் இருந்தது.

எனவே தான் தேசிய மக்கள் சக்தியின் இந்த திடீர் முடிவு ஆராயப்பட வேண்டியதாக இருக்கிறது.

அரசியலமைப்பின் பிரகாரம் பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரான ஒரு மாதத்துக்கும் இரண்டு மாதங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதாவது கோட்டாபய பதவியேற்றதிலிருந்து ஐந்து வருடங்கள் பூர்த்தியாகும் நாளுக்கு (2024 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதிக்கு) முன்னரான ஒரு மாதத்துக்கும் இரண்டு மாதங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் அடுத்த தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதாவது அடுத்த வருடம் செப்டம்பர் 18 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 18 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்திலாகும்.

அதன் படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வருடத்துக்கு மேல் இருக்கும் நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி தமது வேட்பாளரை அறிவித்துள்ளது. இதற்கு பலர் பல காரணங்களை கூறுகின்றனர். அக்கட்சிக்குள் இருக்கும் பதவிப் போட்டியொன்றின் காரணமாக இது அறிவிக்கப்பட்டது என்பது ஒரு கருத்தாகும். ஆயினும் உண்மை அதுவல்ல என்றே தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் செப்டம்பர் மாதத்துக்குப் பின்னர் நடத்தப்பட வேண்டும் என்றாலும் ஜனாதிபதி ஒருவர் பதவியேற்று நான்கு வருடங்கள் பூர்தியாகிய பின்னர் அவர் விரும்பினால் உரிய காலத்துக்கு முன்னரே ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும் என்றும் அரசியலமைப்பு கூறுகிறது. அதாவது கோட்டா தொடர்ந்தும் பதவியில் இருந்தால் இவ்வருடம் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் எப்போதும் தேர்தலை நடத்த முடியும். எனினும் உயிரிழந்த அல்லது இராஜினாமா செய்த ஜனாதிபதி ஒருவரின் பதவிக் காலத்தில் எஞ்சிய காலத்துக்கு பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர், அவ்வாறு பதவிக் காலம் முடிவடையும் முன் மற்றுமொரு தேர்தலை நடத்த முடியாது என்றும் அரசியலமைப்பு கூறுகிறது. ரணில் விக்ரமசிங்க கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக் காலத்தின் எஞ்சிய காலத்துக்கே தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனவே ரணிலுக்கும் பதவிக் காலம் முடிவடையும் முன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது.

இந்த நிலையில் அடுத்த வருடம் ஆரம்பத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் வகையில் இந்தச் சட்டத்தை மாற்ற ரணில் முயல்வதாக கூறப்படுகிறது. இதன் காரணமாகவே தேசிய மக்கள் சக்தி இந்த தருணத்தில் தமது ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானித்துள்ளது என்று ஊகிக்கலாம்.

மற்றுமொரு காரணத்தையும் ஊகிக்கலாம். நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. கடந்த வருட ஆரம்பத்தில் இருந்ததைப் போல் எரிபொருட்களுக்காகவும் எரிவாயுவுக்காகவும் வாரக்கணக்கிலும் மைல் கணக்கிலும் நீண்ட கியூ வரிசைகள் இப்போது இல்லாத போதும் ஏனைய பொருளாதார பிரச்சினைகள் அப்போது போலவே இப்போதும் தமிழர் சிங்களவர் என்ற பேதங்களை பாராமல் மக்களை வாட்டி வதைக்கின்றன.

ஒரு சில பொருட்களைத் தவிர ஏனையவற்றின் விலை தொடரந்து ஏறிக் கொண்டே செல்கிறது. எரிபொருள் விலை ஏறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஏனைய பொருட்களினது விலைகளும் பஸ் கட்டணம் போன்ற கட்டணங்களும் ஏறுகின்றன. ஆனால் மக்களின் வருமானம் குறைந்த வண்ணமே இருக்கிறது. மருத்துவமனைகளில் பல உயிர் காக்கும் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மருத்துவர்கள் பெரும் எண்ணிக்கையில் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர். மக்களின் வரிப்பணத்தை அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகளும் பட்டப்பகலில் சூரையாடுகின்றனர் என்பது கோப் கமிட்டியின் கூட்டங்களின் போது நாளாந்தம் தெரிகிறது.

உள்ளூராட்சிமன்ற தேர்தல்களும் மாகாண சபைத் தேர்தல்களும் தொடர்ந்தும் ஒத்தி வைக்கப்பட்டு வருகின்றன. மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு இருக்கும் சட்டச் சிக்கலை தீர்க்கும் வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்த தனி நபர் சட்ட மூலத்தை உயர் நீதிமன்றம் அங்கீகரித்தாலும் அதை நிறைவேற்றி தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வருவதில்லை. அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கான நிதியினை விடுவிக்காதது மட்டுமல்லாது அந்நிதியினை விடுவிக்க வேண்டும் என்று கட்டளையிட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்களை, பாராளுமன்ற சிறப்புரிமைக்குழு முன் அழைக்கவும் அரசாங்கத்தில் சிலர் முயன்றனர்.


ஆனால் இவற்றை எதிர்த்து குரல் எழுப்ப முடியாத நிலையும் உருவாகியிருக்கிறது. கடந்த வருடம் இடம்பெற்ற மாபெரும் மக்கள் எழுச்சியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி துறந்ததை அடுத்து இராணுவத்தை பாவித்து மூர்க்கத்தனமாக அடக்கிய அரசாங்கம் அதனை அடுத்து எந்தவோர் ஆர்ப்பாட்டத்துக்கும் இடம்கொடுக்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகவே தெரிகிறது. தனி நபர்கள் பதாகைகளுடன் வீதியில் இறங்கிய சந்தர்ப்பங்களிலும் நூற்றுக் கணக்கான பொலிஸார் அவர்களை சூழ்ந்து அவர்களை மிரட்டி அவர்களது எதிர்ப்பை முறியடித்தனர். இப்போது சிறு சிறு தொழிற்சங்கப் போராட்டங்களே இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் வடக்கிலும் தெற்கிலும் சகல எதிர்க்கட்சிகளும் இன பாகுபாடுகளை மறந்து ஒன்று சேரந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குரல் எதிர்க்கட்சிகளிடையே வலுத்து வருகிறது. இதனை தேசிய மக்கள் சக்தியும் ஏற்கிறது. ஆனால் அவ்வாறான கூட்டு நடவடிக்கைகளை தேர்தல் கூட்டுகளாக மக்கள் பார்க்கலாம். அதேவேளை ஜனநாயகத்துக்கான கூட்டுக்கள் உருவானால் அவற்றை தேர்தல் கூட்டுக்களாக மாற்ற அக்கூட்டுக்குள்ளேயே முயற்சிகள் மேறகொள்ளப்படலாம். பொது ஜனாதிபதி வேட்பாளர் என்ற பழைய கோஷம் மீண்டும் எழலாம். அவ்வாறாயின் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஒதுக்கித் தள்ளப்படலாம்.

ஏற்கனவே கூறியதைப் போல் பல கருத்துக் கணிப்புக்களின் படி தேசிய மக்கள் சக்தியே இவ்வருட ஆரம்பத்தில் முன்னணியில் இருந்தது. அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவில்லை. ஜனாதிபதியின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி, காலநிலை மோசமாக இருக்கிறது என்று தமது வருடாந்த மாநாட்டையும் ஒத்திவைத்துள்ளது. இந்த நிலையில் தமது பலத்தால் ஊழல் பேர்வழிகளாக தாம் கருதும் மற்றவர்களில் ஒருவரை பதவியில் அமர்த்த வேண்டுமா என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் நினைத்தால் அது நியாயமானதாகும்.

எனவே முன்கூட்டியே தமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்துவிட்டால் ஜனநாயகத்துக்காக ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து செயற்பட்டாலும் தாம் மற்றக் கட்சிகளை பதவியில் அமர்த்தும் இக்கட்டான நிலை வராது என்று அக்கட்சியின் தலைவர்கள் நினைத்திருக்கலாம். இதுவும் இந்த நேரத்தில் அக்கட்சி அனுர குமார திஸாநாயக்கவை தமது வேட்பாளராக நியமிக்க காரணமாக இருந்திருக்கலாம்.

இந்த நிலையில் சிறுபான்மை மக்களின் நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது. தெற்கைத் தளமாகக் கொண்ட பெரும்பான்மை இனத் தலைமை உள்ள கட்சிகள் முடிவுகளை எடுக்கும் போது பெரும்பான்மையின நெருக்குதலுக்கு ஆளாவது சகஜமாகும். அவ்வாறான நியாயமற்ற நெருக்குதல்களுக்கு இடம் கொடுக்காதவரை அல்லது குறைந்தளவு இடம் கொடுக்கும் வரை தேர்ந்தெடுப்பதே சிறுபான்மையினரின் முன்னுள்ள சவாலாகும்.



## வாழ்வியல் தரிசனம்

மனிதர்களின் தேவைகள் நிறுத்தப்படுவதில்லை. எவ்வளவு பெரும் செல்வம், கல்வி, புகழ் என்பன சேர்ந்தாலும் எந்த ஒரு மனிதனும் முழுமையாகத் திருப்திப்பட மாட்டான். எங்கோ ஒரு குறையைச் சொல்லிவிடுகின்றார்கள்.

நாடுகளின் அரசுகள் கூட, ஆசை மிகுதியால் பக்கத்து நாடுகளுக்குள் நுழைந்து, அட்டகாசம் செய்து அந்த நாட்டைக் கைப்பற்றிவிடுவதுண்டு.

எளியவர்களை உதைப்பது, காலம் முழுக்க நடந்துகொண்டிருக்கின்றது. அரசியலில் இன்று நடப்பது என்ன? வலிமையற்ற அரசாங்கத்தை வைத்திருக்கும் அரசுகள், சிறுபான்மை மக்களுடன் அடிக்கடி மோதுகின்றன.

அவர்களை அடக்கி வைத்திருப்பதில் புலன்களைச் செலுத்தினால், மிஞ்சுவது மேலதிக ஆசைகளும் ஆணவமும் தான். உலக சரித்திரங்களை அறிந்தவர்கள் கூட, தங்களுக்கு அரச பதவி வந்தால், எவரை மதிக்கின்றார்?

ஓரிரு நல்லவர்கள் மாத்திரம், பதவியில் நீதியுடன் கருமமாற்றுகின்றார்கள். பிறரை வருத்தி, அவர்களின் முயற்சியால் வரும் முன்னேற்றம் ஈடேற்றம் தராது.

மாந்தர்கள், ஒருவரை நம்பி ஒருவர் இருக்க வேண்டும். அறத்தை அறியாதவர்கள், வெறுக்கும் காரியங்களைச் செய்வார்கள். அநேகர் அனுபவங்களை மறந்து போகின்றார்கள். இதனாலேதான் துன்பங்கள் வருகின்றன.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வாகன பெட்டரி திருடர்களால் சிக்கல்

இரவில் நிறுத்தப்படும் வாகனங்களில் இருந்து பெட்டரிகளை திருடும் மோசடியில் ஈடுபடுவோர் எவரும் சட்டத்தின் முன் இதுவரையிலும் கொண்டு வரப்படவில்லை என பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இரவு வேளைகளில் நிறுத்தப்படும் வாகனங்களில் இருந்து பெட்டரிகளை திருடும் மோசடி ஒன்று இடம்பெற்று வருவதாக திருடப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் கூறுகின்றனர்.


ஹட்டன், பொகவந்தலாவ, நோர்வூட், மஸ்கெலியா, வட்டவளை, கினிகத்தேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதிகளை அண்மித்து நிறுத்திவைக்கப்படும் தனியார் பஸ்கள், வான்கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் லொறிகள் போன்றவற்றில் பெட்டரிகள் களவாடப்படுவதாக பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ரஞ்சித் ராஜபக்ஷ

# மாற்றமுறும் மனித எண்ணங்கள்



கணேஸ்குமார் மதியந்தி
ஊடக கற்கைகள் துறை
இரண்டாம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்



மனிதமனம் என்பது ஒரு பெருங்காடு. அங்கில்லாத ஒன்று மனிதர்கள் அறியும் வகையில் வேறு எங்கும் இல்லை. நன்மையும் தீமையும்,பிறப்பும் இறப்பும் , விருப்பும் வெறுப்பும் என எல்லாம் சேர்ந்து இயங்கும் பெரும்களம். இப்படிப்பட்ட மனித இயக்கத்தில் ஆதாரமாக விளங்கும் எண்ணங்கள் என்பது நிலையானதோ நிரந்தரமானதோ அல்ல. அது எப்போதும் கால ஓட்டத்திற்கு ஏற்ப மாறிக் கொண்டுதான் உள்ளது.

எப்படி மழை வரப்போவது நமக்குத் தெரியாதோ அதுபோலத்தான் நமது எண்ணமும். எப்போதும் மாறும் என உறுதியிட்டு கூற முடியாது. ஆனால் ஒருவனுடைய எண்ணம் தான் அவனுடைய வாழ்க்கையே தீர்மானிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதற்கு நான் ஒரு குட்டிக்கதையினை கூறலாம் என நினைக்கிறேன்.

வாருங்கள் கதைக்குள் செல்வோம்

கடவுள் பத்து மனிதர்கள் முன்னிலையில் வந்து என்னவேண்டும் கேளுங்கள் தருகிறேன் என்றார். அவரிடம் பத்து மனிதர்கள் தம் தேவைகளைக் கேட்டனர்..

முதல் மனிதன் 'எனக்கு கணக்கிலடங்கா காசும்,பெரிய பிஸினஸும் வேண்டும்' என்றும் இரண்டாம் மனிதன் 'நான் உலகில் சிறந்தோங்கி பெரிய பதவியை அடைய வேண்டும்' என்றும் மூன்றாம் மனிதன் 'உலப்புகழ் பெற்ற நடிகர் போல் மிகப் பெரியபுகழ் வெளிச்சம் வேண்டும்'என்றும் கேட்டனர்.

நான்காம் மனுஷி 'உலக அழகியைப் போல பேரழகு வேண்டும் உலகமே அதில் மயங்க வேண்டும்' என்றாள்.

இப்படி இன்னும் ஐந்துபேரும் தமக்கு வேண்டியதைக் கேட்டனர். கடவுள் அவர்கள் கேட்ட ஒவ்வொன்றையும் டக் டக்கென்று கொடுத்துவிட்டார்.

பத்தாவது மனிதன் கேட்டான் 'உலகத்தில் ஒரு மனிதன் உச்சகட்டமாய் எந்த அளவு மனநிம்மதியோடும் மனநிறைவோடும் வாழமுடியுமோ ,அந்தநிலை எனக்குவேண்டும்' ஒன்பதுபேரும் அவனை திரும்பிப் பார்த்து சிரித்தனர்.

## அதில் ஒருவன்

'மனநிம்மதி ,மனநிறைவு...நாங்களும் அதுக்கு தானே இதையெல்லாம் கேட்டோம்..? விரும்பியது கிடைத்தால் மனநிறைவு கிடைத்துவிடுமே..?'

கடவுள் அந்த ஒன்பது பேரிடமும் 'நீங்கள் கேட்டதைக் கொடுத்துவிட்டேன். நீங்கள் போகலாம்' என்று கூறிவிட்டு,பத்தாவதுமனிதனைப் பார்த்து 'நீ இரு..! நான் உன்னிடம் கொஞ்சம் பேசவேண்டும்.. சிறிது நேரம் கழித்து வருகிறேன்' என்று சொல்லி விட்டு எங்கோ போனார்.

இப்போது,அந்த ஒன்பது பேரும் போகாமல் அங்கேயே தயங்கி நின்றனர். கடவுள் அந்த பத்தாவது மனிதனிடம் என்ன சொல்லப் போகிறார் என்ன தரப் போகிறார் என்பது தெரிந்தே ஆகவேண்டும் என்று அவர்கள் மனம் அலைபாய்ந்தது துடித்தது.

அவர்கள் விரும்பியது எதுவோ அது கையில் கிடைத்த பின்னும், இன்னும் எதுவுமே கிடைக்காத அந்த பத்தாவது மனிதன் மேல் பொறாமை கொண்டு மனம் வெதும்பினர். நேரம் ஆக ஆக , வெறுப்பில் வெந்தனர். தாம் விரும்பியது கையில்

> **மழை வரப்போவது நமக்குத் தெரியாதோ அதுபோலத்தான் நமது எண்ணமும். எப்போதும் மாறும் என உறுதியிட்டு கூற முடியாது. ஆனால் ஒருவனுடைய எண்ணம் தான் அவனுடைய வாழ்க்கையே தீர்மானிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை**

> **அந்த பத்தாவது மனிதன் மேல் பொறாமை கொண்டு மனம் வெதும்பினர். நேரம் ஆக ஆக , வெறுப்பில் வெந்தனர். தாம் விரும்பியது கையில் இருப்பதை மறந்து, அந்த இடத்திலேயே,அவர்களின் நிம்மதி குலைந்து மனநிறைவு இல்லாமல் போனது**

இருப்பதை மறந்தனர். அதை அனுபவிக்க மறந்தனர். அப்போதே,அந்த இடத்திலேயே,அவர்கள் நிம்மதி குலைந்தது. மனநிறைவு இல்லாமல் போனது.

பத்தாவது மனிதன் ,கடவுள் சொல்லுக்காக எந்த பதட்டமும் இல்லாமல் காத்து நின்றான். கடவுள் தன்னிடம் பேசப் போகிறார் என்பதிலேயே அவனுக்கு அவன் கேட்ட முழு மனநிறைவு கிடைத்துவிட்டது.


எனவே மேற்குறிப்பிட்ட கதையை வாசித்தபின்பு உங்களுக்கு நிச்சயம் மனதில் ஒன்று தோன்றியிருக்கும் அதாவது மனிதனுடைய எண்ணம் என்பது எப்பொழுதும் நிரந்தரம் அல்ல. ஆனால் அவனது எண்ணம் தான் அவனுடைய வாழ்க்கையையே தீர்மானிக்கின்றது.

'வாழ்க்கை என்பது உங்களுடையது. அதில் எண்ணம் என்பதும் உங்களுக்கு சொந்தமானது' .ஆகவே நீங்கள் ஒன்பதில் ஒன்றாக இருக்கப் போகின்றீர்களா? அல்லது பத்தாவது மனிதனாக இருக்கப் போகின்றீர்களா? என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.

# அமானுஷ்யங்கள் நிறைந்த
## கபிலவத்தை யாத்திரை

விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா











பல தெய்வீக அமானுஷ்ய அனுபவங்களை கொண்ட முருக பெருமானின் ஆதி இருப்பிடமான கபிலவத்தை யாத்திரை மிக மிக சிறப்பாக கடந்த வாரம்(29,30) நடைபெற்றது.

பிரபல இந்திய பணவளக்கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த் , சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினருடன் ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபிலவத்தை யாத்திரையில் பங்கேற்றமை சிறப்பம்சமாகும்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் ஏற்பாட்டில் நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் காரைதீவு தியாகராஜா ஜீ, சமய ஆர்வலர்களான வி.ரி. சகாதேவராஜா, கே.ஜெயசிறில் உள்ளிட்ட நாற்பது அடியார்கள் பங்கேற்றனர்

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பிராந்தியங்களில் இருந்து இந்த நாற்பது அடியார்களும் பங்கேற்றிருந்தனர்.

ஒவ்வொரு இடங்களிலும் குபேர குரு ஜீ ஆனந்த் , அற்புதமான குபேர வழிபாடுகள், மந்திர தீட்சை, வேல் தீட்சை, குபேர தியானங்கள், செல்வங்களை ஈர்க்கும் ஆழ்மன தியானங்கள் என அனைத்தையும் ஒளிவு மறைவு இல்லாமல் கற்று தந்தார். ஒவ்வொரு இடத்திலும் அற்புதமான ஆன்மீக சத்சங்கத்தை நிகழ்த்தினார்.

பூஜைகள் மற்றும் வழிபாடுகள் அனைத்தையும் சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள் சிறப்பாக ஒழுங்கமைத்து நெறிப்படுத்தினார்.

யாத்திரை ஆரம்பத்தில் முறையாக சம்மாந்துறை கோரக்கர் ஆலயத்தில் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி நிகழ்த்தப்பட்டு, திருஷ்டி தோஷங்களை போக்கும் மூலிகை குளியலுடன் பயணம் ஆரம்பமானது.

பின்னர் மொனராகலையில் இருந்து காடு தொடங்கும் இடத்தில் வன பூஜை மற்றும் இடும்பன் பூஜை செய்து உடல் மன ஆற்றல்களை பெற வனபோஜனம் செய்யப்பட்டது.

தொடர்ந்து கபிலவத்தை மண்ணில் நள்ளிரவில் வீரபாகு தேவர் மற்றும் ஸ்வர்ணாகர்ஷண பைரவருக்கு பூஜை, வன தேவதைகளுக்கு ஒவ்வொரு வருடமும் செய்யும் வன பூஜை, கங்கை ஆற்றில் பிரமாண்டமான மரகதலிங்க அபிஷேகம், நள்ளிரவில் சத்ரு சம்ஹார சண்முக சக்கர யாக குண்டத்தில் ஆறு சக்திகளாக ஆறு லிங்கங்கள் பிரதிஷ்டையை செய்யப்பட்டு நம்முடைய ஆறு ஆதார சக்கரங்களை விழிக்க வைக்கும் சத்ரு சம்ஹார ஹோமம், இரவு முழுவதும் இயற்கையில் இருந்து அபூர்வ ஆற்றல்களை பேரும் மகாதேவ ம்ருத்யஞ்சய தவம், ஒரு லட்சம் பஞ்சாட்சர ஜெபம், தொடர்ந்து பஞ்ச பூத ஆராதனை, பாரம்பரிய பொங்கல் வழிபாடு என அனைத்து வழிபாடுகளும் சிறப்பாக நடைபெற்றன..

இரு நாட்களும் இனிமையான அற்புதமான பல அமானுஷ்ய அனுபவங்கள் கிடைத்தன.

# ஈழத்தமிழ் மக்களின் நில அபகரிப்பு



ஜீவரத்தினம் கஜீபா
ஊடககற்கைகள் துறை
யாழ்பாணப்பல்கலைக்கழகம்

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மூச்சிழந்து ஒரு தசாப்தம் ஆகின்றது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப்பலம் இலங்கை அரசால் தோற்கடிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகின்றது. இப்போது குண்டுச் சத்தங்கள் கேட்பதில்லை.

இயந்திரத்துப்பாக்கிச்சத்தங்களின் சடசடப்பும் துப்பாக்கி சன்னங்கள் காற்றைக்கிழிக்கும் ஓசைகளும் நின்று போய் விட்டன. போர் முடிந்த பின்பு இராணுவப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகளும், அரச காணிகளும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. ஆயினும் கட்டம் கட்டமாக கணிசமான அளவு விடுவிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் மற்றும் ஏனைய இடங்களில் குடியேறிய மக்களுக்கு வீட்டு திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

உலக நாடுகளில் இடம்பெற்ற பெரும்பாலான யுத்தங்களில் போர் தொடுத்த தரப்பினரின் இறுதி நோக்கம் எதிர் தரப்பின் நிலங்களை அபகரிப்பதாகவே இருந்தது.

எதிர்த்தரப்பினையும்,நிலங்களையும் அந்நாட்டு வளங்களையும் கைப்பற்றுவதே இறுதி நோக்கமாக இருந்தது. நிலமற்ற மக்கள் வேர் அற்ற மரங்கள் போலாவார்.அது போலவே திட்டமிட்ட இனக் கலவரங்கள், படை முகாம்களின் விரிவாக்கம், உயர் பாதுகாப்பு வலயங்கள் போன்றவற்றிற்க்காக தமிழர்களின் இருப்பிடங்களை வலுக்கட்டாயமாக பிடுங்கினார்.

தமிழர்களின் மூன்று தசாப்த கால ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் படையினரால் கையகப்படுத்தி வைத்திருந்த காணிகளை பகுதி அளவே விடுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு எழுந்தது. காணிகளை விடுவிக்குமாறு தமிழ் மக்கள் நிகழ்த்திய வலுவான தொடர் கவனயீர்ப்பு போராட்டங்கள் சர்வதேசளவில் அரசுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தியது. யுத்தத்தில் பெருந்தொகையில் தமிழ் மக்களே கொல்லப்பட்டனர்.கைது செய்யப்பட்டவர்களும் சரணடைந்தவர்களும் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்தும் அரசாங்கம் மனித உரிமை அமைப்புகளின் பலத்த கண்டனங்களுக்கு ஆளாகிய நிலையில் அதனை சமாளிக்கும் நோக்கில் காணிகளை விடுவிக்கும் முடிவுக்கு வந்தது.

தனக்கு அவசியமெனக் கருதுகின்ற காணிகளை அபகரித்துக் கொண்டு ஏனையவற்றை கட்டங்கட்டமாக விடுவித்து வருகின்றது. ஆயினும் இக்காணி விடுவிப்புகளை தமிழ் மக்கள் அதிகமாக ஆறுதல் கொள்வதற்கு இல்லை. இராணுவம் மக்களிடமிருந்து பறித்த காணிகளை அம்மக்களிடமே திருப்பிக் கையளிக்கின்ற நிகழ்ச்சிகளை அரசாங்கம் உலகறியும் வைபவங்களாக படம் பிடித்து காட்டி வருகின்றன.

அரசாங்கம் பெருமளவு நிலங்களை சத்தம் இல்லாமல் சட்டபூர்வமாக விழுங்கவும் ஆரம்பித்திருக்கின்றது.காடு வளர்ப்பு, உயிர்பல்வகைமை பாதுகாத்தல், ஜீவராசிகளைப் பாதுகாத்தல் போன்ற போர்வையில் அரச மக்களின் நிலங்களை அபகரிக்க ஆரம்பித்திருக்கின்றது.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்தில் அதிகமாக காடுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வடக்கின் நிலப்பரப்பில் 49 ஏக்கர் விழுக்காடுகளால் மூடப்பட்டு உள்ளது. வடக்கு மாகாணத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட நிலங்கள் காடுகளால் நிறைந்திருப்பதற்கு காரணம் மூன்று தசாப்த காலமாக வடக்கில் நிகழ்ந்த ஆயுதப் போராட்டம் ஆகும்.

வடக்கில் காடுகள் அதிகமாக இருப்பதற்கு இன்னும் ஒரு காரணம் யுத்த கால இடப்பெயர்வு ஆகும். சூனியப்பிரதேசங்களாக கைவிடப்பட்ட நிலங்களில் மரங்கள் வளர்ந்து காடுகளாக உருமாறி உள்ளன. இப்போது இவற்றை உள்ளடக்கிய வனவளத் திணைக்களம் காடுகளின் எல்லைகளை விரிவு படுத்தி உள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் தங்கள் முன்னைய வயல்களில் மக்கள் மீளவும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதை காடு பேணல் கட்டளை சட்டம் தடை செய்துள்ளது. வடக்கு மாகாணத்தில் சரணாலயங்கள் தேசிய பூங்காக்களாக அறிவிக்கப்பட்ட போது அவற்றை அண்டியுள்ள பெருமளவு காணிகள் உள்வாங்கப்பட்டு உள்ளன.

இதற்குள் பொதுமக்களின் காணிகளும் அடங்கியுள்ளன. உதாரணமாக சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், சுண்டி குளம் தேசிய பூங்கா என விரிவுபடுத்தப்படும் போது கட்டைக்காடு, நித்தியாவட்டி, போக்கறுப்பு கிராமங்களில் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த ஏறத்தாழ 138 ஏக்கர் விஸ்தீரணமுள்ள 311 காணித் துண்டுகளும் , வாடிகள் அமைந்திருந்த 52 காணித் துண்டுகளும் ஏறத்தாழ 250 ஏக்கர் தனியார் வயற்க்காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் இங்கு காலம் காலமாக வாழ்ந்து தொழில் செய்து கொண்டிருந்த மக்களின் நிலம் ஒரே நாளில் சட்டத்தால் அபகரிக்கப்பட்டு நிலம் அற்றவர்களாக ஆக்கப்பட்டு உள்ளனர். தேசிய பூங்காக்கள், ஒதுக்கிடங்களுக்காகவும் பொதுமக்களின் காணிகள் வாழ்விடங்கள், வணக்கத்தலங்கள், வயல் நிலங்கள், தென்னந்தோட்டங்கள், என்பன கையகப்படுத்தப்பட்டுள்ளன. மனித நடவடிக்கைகளால் சுருங்கி வருகின்ற காட்டு வளத்தையும் அருகி வருகின்ற விலங்கு வளத்தையும் பேணிப் பாதுகாக்கின்ற முயற்சியிலேயே காடுகள், சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், இயற்கை ஒதுக்கிடங்கள் போன்றவை உருவாக்கப்படுகின்றன.

உலக நாடுகள் பலவும் இதயசுத்தியோடு காடு, காட்டு விலங்குகளை பேணிப்பாதுகாப்பதில் ஈடுபட்டு உள்ளன. ஆனால் இலங்கை அரசாங்கம் மக்களின் காணிகளைக் கையாண்டு சூழல் அரசியலை நடத்தி வருகின்றன. குடியிருப்பு பிரதேசங்களை காடுகளாக பேணுவது பூங்காக்களாக விரிவு படுத்துவதும் மக்களை அவர்களின் நிலங்களிலிருந்து பெயர்க்கும் சூழலியல் ஏகாதிபத்தியமும் அரசியல்வாதிகளின் ஏகாதிபத்தியமும் ஆகும். உலக வரலாறு இவற்றுக்கான உதாரணங்களை ஆங்காங்கே இரத்தக் கரிகளோடு பதிவு செய்து வைத்திருக்கின்றது.

அமெரிக்கா இன்று அமெரிக்கர்களின் நாடு அல்ல. இது செவ்விந்தியர்களின் தேசம் ஐரோப்பாவிலிருந்தும் பிரித்தானியாவிலிருந்தும் பெருவாரியான வந்து குடியேறியவர்களால் பூர்வீகக்குடிகளான செவ்விந்தியர்கள் இன மூழ்கடிப்புச் செய்யப்பட்டார்கள். லட்சக்கணக்கான செவ்விந்தியர்கள் இனப்படுகொலைக்கு ஆளானார்கள். குடியேறிகளினால் புதுப்புது நோய்கள் வந்து மக்கள் கொத்துக் கொத்தாக பலியெடுக்கப்பட்டார்கள்.

இயற்கையை தாயாகப் பூசிப்பவர்கள் உணவுக்காக வேட்டையாடினாலும் வனவிலங்குகளை நட்பாக பேணுபவர்கள் ஆனால் செவ்விந்தியர்களிடமிருந்து வனவிலங்குகளை பாதுகாப்பதாக கூறி அவர்களின் வாழ்விடங்களை தேசியப் பூங்காக்களாக அறிவிக்கப்பட்டு அங்கிருந்து அவர்கள் விரட்டப்பட்டார்கள். இன்று அமெரிக்க பூர்வ குடிகளில் எலும்புகளின் மீது கட்டப்பட்டிருக்கும் வந்தேறு குடிகளின் தேசம் தான் அமெரிக்கா.

இலங்கை அரசாங்கம் தற்போது சூழல் பாதுகாப்பு என்ற பெயரால் நிலங்களை விழுங்கிக் கொண்டு இருக்கின்றன . வரலாற்றின் படிப்பினைகளை கற்றுக்கொண்டு இலங்கை அரசாங்கம் தொடுத்திருக்கும் பச்சை யுத்தத்தை நாம் சரியான முறையில் எதிர் கொள்ள வேண்டும் தவறி அமெரிக்க செய்தியை செவ்விந்தியர்கள் வழியே ஈழத் தமிழ் இனத்துக்கும் நேர்ந்ததாக வரலாறு சோகத்தோடு பதிவு செய்து கொள்வதனை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆந்திரா

# செல்போன் வெளிச்சத்தில் சிகிச்சை அளிப்பு

ஆந்திர மாநிலம், பார்வதிபுரம் மண்டலம், கும்ம லட்சுமி புரத்தை சேர்ந்த 8 பேர் முச்சக்கரவண்டியில் சென்று கொண்டு இருந்தபோது எதிர்பாராத விதமாக முச்சக்கரவண்டி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 2 பேர் படுகாயமும், 6 பேர் லேசான காயமும் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்களை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக குருபம் ஆரம்ப



சுகாதார நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர். அறிவிக்கப்படாத அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு காரணமாக இன்வெர்ட்டர் செயல் இழந்துவிட்டது.


இதனால் மின்சாரம் இன்றி காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாமல் வைத்தியர்கள் திணறினர். பின்னர் தங்களது கையடக்க தொலைபேசி உள்ள டோர்ச் வெளிச்சத்தில் உரிய நேரத்தில் சிகிச்சை அளித்தனர். இதனால் 2 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இதனை அறிந்த பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் வைத்தியர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

ஆந்திரா

# பல கிளைகளுடன் தென்னை, பனை மரங்கள்

ஆந்திர மாநிலம், மேற்கு கோதாவரி மாவட்டம், உன்ராயுடு பேட்டையை சேர்ந்தவர் கத்தரி சீனிவாசராவ். இவர் அதே பகுதியில் இறால் பண்ணை நடத்தி வருகிறார். இறால் பண்ணை குட்டையின் கரையில் தென்னை மரங்களை வளர்த்து வருகிறார். அதில் ஒரு தென்னை மரம் மற்ற மரங்களைப் போல் வளர்ந்து வந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்பு



தென்னை மரத்தில் மற்றொரு கிளை உருவானது. நாளாக நாளாக மேலும் 4 கிளைகள் வந்தன. சாதாரணமாக தென்னை மரங்கள் ஒரே கிளையுடன் வளர்வது வழக்கம். ஆனால் அதிசயமாக இந்த மரத்தில் 6 கிளைகள் வளர்ந்தன.

இதேபோல் அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அருகே உள்ள குளக்கரையில் பனை மரம் ஒன்று 5 கிளைகளுடன் உள்ளது. ஒரே ஊரில் 6 கிளைகளுடன் தென்னை மரமும், 5 கிளைகளுடன் பனை மரமும் உள்ளது. இதனை அக்கம்பக்கம் கிராமங்களை சேர்ந்தவர்கள் ஆச்சரியமாக பார்த்து செல்கின்றனர்.

சென்னை

# அமைச்சர் உதயநிதி தலைக்கு ரூ.10 கோடி

சனாதனம் குறித்து பேசிய அமைச்சர் உதயநிதி தலைக்கு ரூ. 10 கோடி என அயோத்தியைச் சேர்ந்த பரகாம்ச ஆச்சாரியா எனும் சாமியார் அறிவித்துள்ளார். மேலும், அமைச்சர் உதயநிதியின் புகைப்படத்தை கத்தியால் குத்தியும், தீயிட்டுக் கொளுத்தியும் தனது எதிர்ப்பை பகிர்ந்துள்ளார்.

முன்னதாக, சென்னை காமராஜர் அரங்கில் தமிழ்நாடு முற்போக்கு கலைஞர்கள் எழுத்தாளர்கள் சங்கம் நடத்திய 'சனாதன ஒழிப்பு



மாநாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது, இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. 'சனாதன எதிர்ப்பு மாநாடு' என்று போடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது என்று அமைச்சர் உதயநிதி தெரிவித்தார்.

உதயநிதியின் இந்த கருத்துக்கு பல்வேறு எதிர்கருத்துக்கள் தற்போது கிளம்பியுள்ளன. சில வருடங்களுக்கு முன்பு, ராம்விலாஸ் வேதாந்தி எனும் வடமாநில சாமியார் கலைஞர் கருணாநிதி தலையை சீவுவேன் என்று தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# புதினை கிம்ஜாங் உன் சந்திக்கிறார்

ரஷ்யா-வடகொரியா நாடுகள் இடையே ஆயுத ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் இம்மாதம் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாகவும், ரஷ்ய ஜனாதிபதி புதினை சந்தித்து உக்ரைன் போருக்கு ஆயுதங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்க உள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பான செய்தியை அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் ஊடகம் வெளியிட்டுள்ளது. ஜிம்ஜாங் உன், ரஷ்யாவுக்கு ஆயுதம் தாங்கிய வீரர்கள் பாதுகாப்புடன் ரயிலில் பயணம் மேற் கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாட்டு தலைவர்கள் எந்த இடத்தில் சந்தித்து பேசுவார்கள் என்று தெளிவான விவரம் கிடைக்கவில்லை.



ஈரான்

# யுக்ரேனிய சேகரிப்பை வேகமாக குறைக்கும் ஈரான்

அணு சக்தியை அமைதி நடவடிக்கைகளுக்கு மட்டுமே உலக நாடுகள் பயன்படுத்த ஐக்கிய நாடுகள் சபையால் 1957ல் உருவாக்கப்பட்டது சர்வதேச அணுசக்தி அமைப்பு.

மேற்காசிய நாடான ஈரான், அணு சக்தியை அமைதி வழிக்கே பயன்படுத்துவதாக தெரிவித்து வந்தது. ஆனால், சர்வதேச அணு சக்தி அமைப்பு இதனை ஏற்க மறுத்தது. தேவைப்பபட்டால் உடனடியாக அணு ஆயுதங்களை உருவாக்கி கொள்ளும் வகையில் போதுமான அளவு செறிவூட்டப்பட்ட யுக்ரேனியத்தை ஈரான் சேமித்து வைத்துள்ளதாக இந்த அமைப்பு கூறி வந்தது.

2015-இல் உலக நாடுகளுடன் ஈரான் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அதிகபட்சமாக 202.8 கிலோகிராம் அளவு யுக்ரேனியம் மட்டுமே அந்நாடு சேகரித்து வைத்து கொள்ள அனுமதிக்கப்பட்டு இருந்தது. உலக நாடுகளுடன் ஈரான் செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தை மீறும் விதமாக சில வருடங்களாக அந்நாடு செயல்பட்டு வந்தது.

இதனால் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே பதட்டம் நிலவி வந்தது. சமீபத்தில் இதை தணிக்கும் விதமாக இரு நாடுகளும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி, இரு நாட்டின் சிறைகளிலும் உள்ள தங்கள் நாட்டு கைதிகளை பரிமாற்றம் செய்து கொள்ளவும், தென் கொரிய வங்கிகளில் முடக்கி வைக்கப்பட்ட ஈரானுக்கு சொந்தமான பல நூறு கோடிகளை விடுவிக்கவும் அமெரிக்கா ஒப்பு கொண்டால், ஈரான் தனது அணு ஆயுத முயற்சிகளை மட்டுப்படுத்தி கொள்வதாக கூறி இருந்தது.

இந்நிலையில், ஈரானின் அணு சக்தி திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து சமீபத்தில் சர்வதேச அணு சக்தி அமைப்பு ஓர் ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த பெப்ரவரியில் 87.5 கிலோகிராம் எனும் அளவிலும், பிறகு மே மாதம் 114 கிலோகிராம் எனும் அளவிலும் இருந்த 60 சதவீதம் செறிவூட்டப்பட்ட யுக்ரேனிய சேகரிப்பு, தற்போது 121.6 கிலோகிராம் எனும் அளவிலேயே உள்ளது.

உக்ரைன்

# பாதுகாப்பு மந்திரி பதவி நீக்கம்

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. அதை தொடர்ந்து நடைபெற்ற போரில் இரு தரப்பிலும் உயிர் சேதங்கள் ஏற்பட்டன. இந்நிலையில் உக்ரைன் நாட்டின் பாதுகாப்பு மந்திரி ஒலெக்ஸி ரெஸ்னிகோவை அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பதவி நீக்கம் செய்துள்ளார். அவருக்கு பதிலாக ருஸ்டெம் உமெரோவை நியமிக்குமாறு அவர் அறிவித்துள்ளார். நாட்டு மக்களுக்கான காணொளி செய்தியில் இது தொடர்பாக குறிப்பிட்டுள்ள ஜெலென்ஸ்கி, பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவுக்குப் பதிலாக ருஸ்டெம் உமெ ரோவை நியமிக்க இந்த வாரம் நாடாளுமன்றத்தை நாட இருப்பதாக தெரிவித்துள்ளார்.



# ஆசியக் கிண்ணம்: சுப்பர் 4-இல் இந்தியா



ஆசியக் கிண்ணத் தொடரின் சுப்பர் 4 சுற்றுக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நேபாளத்துடனான குழு ஏ போட்டியில் டக்வேர்த் லூயிஸ் முறையில் வென்றமையைத் தொடர்ந்தே சுப்பர் 4 சுற்றுக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

நேபாளம்: 230/10 (48.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஆசிஃப் ஷெய்க் 58 (97), சோம்பால் கமி 48 (56), குஷால் புர்டேல் 38 (25) , டிபேந்திர சிங் ஐரீ 29 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 3/40, மொஹமட் சிராஜ் 3/61, மொஹமட் ஷமி 1/29, ஹர்டிக் பாண்டியா 1/34, ஷர்துல் தாக்கூர் 1/26)

இந்தியா: 147/0 (20/23 ஓவ. ) (வெ.இ: 145 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா ஆ.இ 74 (59), ஷுப்மன் கில் ஆ.இ 67 (62) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: றோஹித் ஷர்மா

வாலிப கிண்ணத் தொடர்:

# அடுத்த சுற்றில் கம்பர்மலை யங்கம்பன்ஸ்

அஸ்ஹர் இப்றாஹிம்

இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தும் அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற அராலி திருமகளுடனான போட்டியில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி 5-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

யங்கம்பன்ஸ் சார்பாக பிராகஷ், கஜானன் ஆகியோர் தலா 2 கோல்களையும், குகரதன் ஒரு கோலையும் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக பிரகாஷ் தெரிவானார்.

போட்டி நிறைவு கட்டத்தை அடைந்த போது திருமகள் அணி வீரர்கள் மத்தியஸ்தரின் தீர்ப்புக்கு மறுப்புத் தெரிவித்து மைதானத்தில் இருந்து விலகினர். இதனால் யங்கம்பன்ஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.




கிண்ணியா மஹ்ரூப் கிராமத்தில்

# பொது விளையாட்டு மைதானத்துக்கான காணியை அடையாளப்படுத்தல்

எஸ். சினீஸ் கான், அ. அச்சுதன்

கிண்ணியா விளையாட்டு கழகங்களின் வேண்டுகோளுக்கமைவாக, நீண்ட காலமாக மஹ்ரூப் கிராமத்தில் பொது விளையாட்டு மைதானம் இல்லாமல் இருந்தது பெரும் குறையாக இருந்து வந்துள்ளது. அதனை நிவர்த்தி செய்து பொது விளையாட்டு மைதானம் ஒன்றுக்கான காணியை அடையாளப்டுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அப்பிரதேசத்துக்குகு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் விஜயம் செய்தார்.

மேலும் அங்குள்ள விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பிரதேச மக்களுடன் கலந்துரையாடி உரியகாணி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.



# இரத்தினபுரி சீவலி ம.ம.விக்கு நவீன் அனுசரணை

சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி சீவலி மத்திய மகா வித்தியாலயம், இந்தியாவின் லக்னோ குன்வே குளோபல் பாடசாலைக்கிடையான போட்டிக்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவின் திசாநாயக்க அனுசரணை வழங்கியுள்ளார்.

குளோபல் பாடசாலை மூலம் சீவலி மத்திய மகா வித்தியாலயத்துக்கு கிடைத்த அழைப்பின் பேரில் அப்பாடசாலை கிரிக்கெட் அணியானது ஐந்து நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளது.

இதற்கான நிதியுதவி காசோலையை சப்ரகமுவ மாகாண ஆளுநரான நவின் திசாநாயக்க மேற்படி பாடசாலை அதிபரிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளித்தார்.






# நியூசிலாந்து உலகக் கிண்ணக் குழாமில் வில்லியம்ஸன்

உலகக் கிண்ணத்துக்கான குழாமில் நியூசிலாந்தின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன் தேர்வாகவுள்ளார். எனினும், உலகக் கிண்ணத்தில் எவ்வளவு காலத்துக்கு அவர் தயாராவார் என்பது தெளிவில்லாமலுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 06 செப்டெம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.